மணிவாக்கு

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை;

—குறள்

# நமது நோக்கு

## இரண்டுபட்ட 'சிறிலங்கா'

வெலியூரில் நடைபெறவிருக்கும் தமிழ் ஈழப் பிரகடனத்தை கருத்தில் கொண்டு எமதுநாடு இரண்டுபட்டு விட்டதென்பதை நாம் இங்குகுறிப்பிடவில்லை.

நாட்டின் மிகப்பெரிய அரசியல் கட்சிகளில் ஒன்றான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் நிலவிவரும் பிளவையே இங்கு கவனத்துக்கு எடுத்துக் கொள்கின்றோம்.

கட்சியின் காரியாலயம் பூட்டப்பட்டிருந்ததும், அதனைத் தொடர்ந்து எழுந்தும், எதிர் எழுந்தும் நடைபெற்றுவந்ததும், பிரிவினைத் தலைவர்கள் - சிறிமாவோவுக்கும் மைத்திரிபாலாவுக்கும், மாறிமாறி சார்பாகவும், எதிராகவும் தீர்ப்புகள் வழங்கப்பட்டதும் வாசகர்கள் படித்துச் சுவைத்த விடயங்கள்! "சுவைத்த" என்று நாம் கூறும்போது, சில போட்டி அரசியல் கட்சிகள் இப்பிணக்கில் இன்பம் காண்பதை நாம் கருதவில்லை.

முன்னைநாள் பிரதமர் அமரர் பண்டாரநாயக்காவின் இலட்சியங்களைக் கடைப்பிடித்து நாட்டை உண்மையான சுதந்திரப் பாதையில் இட்டுச்செல்ல மக்களின் ஆமோக ஆதரவு பெற்று, நாட்டை இருமுறை பிரதமராக, உலகின் முதற் பெண் பிரதமராக 12 வருடங்கள் ஆட்சி செய்த திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, தமது தம்பிக்கைக்குப் பெரும் பாத்திரமான தமதுமகன் உட்பட பல சகாக்களுடன் பிணங்கியிருப்பதும், இப்பிணக்கைப் பலர் தீர்க்க முயன்றும், அதனை வளர்க்கும் சக்திகள் அவரை அந்த நிலைக்கு இட்டுச் செல்வதும் நாட்டின் ஜனநாயக கோட்பாட்டுக்கு முற்றும் முரணானது.

முன்னைநாள் பிரதமர் சிறிமாவோ பிரஜாவுரிமை இழந்திருந்தபோதிலும், மக்கள் ஆதரவும் அனுதாபமும் அவருக்கு நிரம்ப உண்டு.

இன்று தொடர் நாடகமாக நடைபெறும் பிரிவினைச் சம்பவங்கள் அரசியல் கோட்பாடு வேற்றுமை காரணமாகவே எழுந்தது என்று சொல்லப்படுகிறது.

தாயார் சிறிமாவோ சோஷலிஸ்ற் சித்தாந்தத்தையும், மகன் மாக்சிஸ சார்பும் என்பது பரவலாகப் பேசப்படும் விடயம்; தாயும், மகனும் என்றாலும் கொள்கைகள் வேறுபட்டால் கட்சி குடும்பப்போவது அரசியல் வரலாற்றில் நிகழக்கூடிய சம்பவம்.

ஆனால் இன்றைய இலங்கை அரசியலில், சீனாவும், ரஷ்யாவும் இரு பெரும் கட்சியைப் பிரிக்கவும் சீன சார்புக் 'கிடி' அதற்குப் பெரும் பகையான ஐ. தே. கட்சியுடன் எதிர்க்கவும்' உகந்த அரசியல் நிலை பொருந்தவில்லை என்பது அரசியல் அவதானிகள் ஒப்புக்கொள்வர். அரசியல் கொள்கை வேறுபாடுதான் காரணமென்றால்; ஐ. தே. கட்சிக்கு இரண்டுபட்ட சிறிலங்கா எதிர்க்கட்சியாக மீண்டும் அமைந்து ஜனநாயக ஆட்சிக்கு அர்த்தம் அளிக்குமென்று நம்ப இடமில்லை; ஆட்சியைக் கைப்பற்றுவதென்றால் வேறு அதிசய உறவுகள் அவசியம்.

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும், திரு. மைத்திரிபாலாவும் தத்தம் பிரிந்த கட்சிகளுக்குத் தலைமைதாங்கி, வாதாடி, வழக்குரைத்து விரயம் செய்வதில் ஒரு பெரிய தேசியக் கட்சிக்கு மூடுவிழா நடத்துவதில் வெற்றிகாணமுடியும்.

இந்த நிலையில் மீண்டும் ஐ. தே. கட்சி வெற்றிபெற்று அதற்கு அதிகாரம் தங்கியிருப்பது வியப்பான விடயமா?

தமிழ்மக்களைப் பொறுத்தளவில் கடந்தகால அனுபவம், எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் நிவாரணம் கிடைப்பது முயற்கொம்பு என்ற முகாரி இராகம் பாடுவது வழக்கமாய்விட்டது.

இந்த நம்பிக்கை ஆழ்ந்த அரசியல் ஞானமுடைய தாய்க்கு காணவில்லை.

சர்வாதிகார மயமான ஆட்சியில் சிறுபான்மையினர் நியாயமான கோரிக்கைகளுக்கு தீர்வுகாண்பது அரிதினும் அரிது;

பலம்பெற்ற எதிர்க்கட்சி எந்த நிலையிலும் மக்கள் ஆட்சிக்கு அவசியம். இதனை விரும்புபவர்கள் "சிறிலங்கா" ஒற்றுமைப்பட வேண்டுமென்பதை விரும்புவார்கள்.

## ஆறுமாத ஆண் குழந்தை

ஆறு தினங்களைக்கு ஐ. நா. அங்கமெல்லாம் நிறைந்த பெற்றெடுத்த ஐந்தாவது செகணாவர் நாயகம் பெருநாட்டைச்சேர்ந்த திரு. பெரஸ் டி கியூலர்! அவர் ஒரு குறைமாதப் பிள்ளையல்ல, பூரண வளர்ச்சியுடையவர் தமது மிகப்பெரிய பொறுப்பை இன்று சம்பிரதாயமாக பதவிப்பிரமாணத்துடன் ஏற்றுக்கொள்கின்றார்.

ஐ. நா. வின் புதிய பொதுக்காரியதரிசி மூன்றாம் உலகுக்கு ஒருபெரு வெற்றி. லத்தீன் அமெரிக்காவிலுள்ள பெருநாட்டைப் பிறப்பிடமாகக்கொண்டவர் எவ்விதத்திலும் குறைவற்ற மனிதனாகக் காணப்படமாட்டார்.

எவ்வாறாயினும் இம்முறை ஒரு மூன்றாம் உலகப்பிரதிநிதியையே இப்பெரும் பதவிக்கு நியமிக்கவேண்டுமென்று திடங்கொண்டது சீனா! தாமொருவரைச் சார்ந்தவர் என்றும் விருப்பங்கொள்ளாத சீனா மூன்றாம் உலகங்களுக்கு சாதகமாகவே நடந்து கொள்ளுமென்ற வாக்குறுதி இவ்விடயத்தில் நிறைவேறியது.

எவ்வித பிரசாரமுமின்றி வீட்டிலிருந்து வெற்றி பெற்ற 61 வயதான ஜேவியர் உடனடியாக மத்திய கிழக்குப் பிரச்னையில் அரசியல் தீர்வுகாண முடியுமென்ற நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார். ஈற்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோனென உலகம் வாழ்த்த வழிபிறக்க வேண்டும்.

கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிப்புற்ற

# அகதிகளுக்கு 70 வீடுகளைக் கட்டிக் கொடுத்தனர்

## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்

(யாழ்ப்பாணம்) கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் அவையினர் இதுவரை 70 வீடுகள் கட்டிக் கொடுத்துள்ளனர்.

கனகாம்பிகைக்குளம், முறிப்பு, புக்குளம் ஆகிய பகுதிகளிலேயே இவ்வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

"எந்தவித அரசியல் கலப்பற்ற இப்பொதுப்பணியில் மாணவர்கள் தொடர்ந்து ஈடுபட்டுவருவதாகவும், தொடக்கத்தில் 50 வீடுகள் கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோது ஒத்துழைப்புகள் வழங்கிய கிளிநொச்சியில் உள்ளபிரமுகர்கள், பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுஸ்தாபனங்களின் உறுப்பினர்களுக்கு பல்கலைக்கழக மாணவர் அவை சார்பாக நன்றி தெரிவிப்பதாகவும் மாணவர் அவைத்தலைவர் திரு. கே. என். இராசநாயகம் கூறினார்.

### நிதிவழங்குவோர் கவனத்துக்கு

கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு உதவ யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை; உறுப்பினர்களிடமிருந்து மட்டுமே நிதி சேர்க்கப்பட்டதாகவும், பொதுமக்களிடமிருந்து எவ்வித பணமும் சேர்க்கப்படவில்லை என்றும் பல்கலைக்கழக சார்பிலும் யாரும் நியமிக்கப்படவில்லை என்றும், யாழ். பல்கலைக்கழகமாணவர் அவைத்தலைவர் திரு. கே. என். இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தின் சார்பில் யாரும் வெளியாரிடம் நிதி கோரினால், எந்தவிதமான பணமோ அல்லது பொருள்களோ வழங்க வேண்டாமென்றும் அப்படி வருபவர்களைப் பற்றி சரியான தகவல்களைதரும் பட்சத்தில், அவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் திரு. இராசநாயகம் குறிப்பிட்டுள்ளார். (மா)

## பூதவராயன் குளமும் வெள்ளவாய்க்காலும்

முன்னைய மன்னர்கள் அறிவாளிகளான கிராமங்கள் மத்தியில் குளங்களை ஆக்கி வெள்ளம் பாயும் வாய்க்காலையும் வெட்டி வைத்தார்கள். "ஆக்குவது அரிது போக்குவது எளிது."

நல்லூர் கிராமசபையின் நாலாம் ஐந்தாம் வட்டாரங்களின் மையத்தில் பூதவராயர் குளம் அமைந்துள்ளது. மாரி காலத்தில் இப்பூர்வீகக் குளம் அயற்கிராமங்களின் வெள்ளத்தால் நிறைந்து மிஞ்சியநீர் அதன் தெற்குப்புறமாக கிழக்கே நோக்கி வெட்டப்பட்டுள்ள வாய்க்கால் வழியாகப் பாய்ந்து சட்டநாதர் சிவன் ஆலயத்திற்கும் அதன் நந்தவனத்திற்கும் இடைப்பட்ட வாய்க்கால் வழியோடி யாழ். மாநகர சபையின் முந்நாள் 7ம் வட்டாரத்தை ஊடறுத்துச் சென்று செம்மணியை அடையும்.

தற்போது மேற்படி குளத்தின் வெள்ளவாய்க்கால் நல்லூர் நாலாம் வட்டாரத்தில் உள்ள நந்தவனத்தில் கட்டப்பட்டுள்ள வாகனங்கள் சுத்திகரிக்கும் நிலையத்திலிருந்து வரும் குறுடெண்ணெயாலும் டீசல் கிறீஸ் போன்ற கழிவுப் பொருட்களும் நிறைந்து அடைபட்டதுடன் வாய்க்காலின் மேலே கட்டப்பட்டிருக்கும் பாதையாலும் தடைப்பட்டு விட்டது: இதனால் அண்மையில் பூதவராயர் குளம் நிறைந்து வழிந்து வெள்ளம் திரும்பி நாலாம் ஐந்தாம் வட்டாரத்தின் வெள்ளக்காடாகிவிட்டது' இன்னும் மழைபெய்யுமாயின் ஏழை மக்கள் குடிபெயரவேண்டிவரும். அவர்கள் ஆடு, மாடு, கோழி போன்ற சீவபிராணிகளின் நிலையைச் சொல்லவும் வேண்டுமா?

முன்பு இவ்வெள்ள வாய்க்காலின் ஓர் பகுதியை நல்லூர் கிராம சபையினரும் சீர்திருத்திப் பாதுகாத்து வந்தனர். மிகுதி வெள்ளவாய்க்காலை யாழ் மாநகர சபையினர் சீர்திருத்தி வந்தனர். பெரும் மழைகாலத்தில் இந்நிலை வருமென மக்கள் மேலிடத்தினர் கவனத்திற்கு கொண்டு வந்தும் அவர்கள் செவிசாய்த்ததாகத் தெரியவில்லை.

தேர்தல் காலத்தில் மாத்திரம் எம்மைச் சந்திப்பதா? எம் குறைகளுக்கு ஆவன செய்ய வேண்டாமா? எனப்பணிவாக வேண்டுகிறேன்.

ச. சபாரத்தினம்
முன்னாள் நல்லூர்க்கிராமசபை 5ம் வட்டார அங்கத்தவர்.

### என்போன்றோருக்கு என்ன வழி?

1976ம் ஆண்டு நான் உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 2 விசேட சித்திகளும் 2 சாதாரண சித்திகளும் பெற்றேன். ஆனால் அப்போது நடைமுறையில் இருந்த தரப்படுத்தலால் எனக்கும் என்போன்றோருக்கும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லை. உயர் கல்விகற்கத்தான் வாய்ப்பு இல்லை பேலவாவது பெறுவதற்கு முயற்சிப்போம் என்றால் பொறியியல், வர்த்தகம், வர்த்தக எண்கணிதம், புவியியல் போன்ற பாடங்களைக்கற்ற எம்போன்றவர்களை ஒன்றுக்கும் தேவையில்லை என ஒதுக்கிவிட்டனர். கடைசி ஆசிரியர் பதவிக்காவது முயற்சிப் போம் என்றால் அதிலும் நான் மேலே குறிப்பிட்ட பாடங்கள் தவிர்ந்த மற்றைய பாடங்கள் உள்ளவர்களையே மனுப்பண்ணுமாறு கேட்கப்படுகின்றது. வர்த்தகம் பொருளாதாரம் ஆகிய பாடங்களைப் படித்த என் போன்ற பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு விமோசனம் இல்லையா? உயர் கல்வி அமைச்சு இதை மறுபரிசீலனை செய்து எம்போன்றவர்களும் சீவிக்க உதவிசெய்ய வேண்டுமென பணிவுடன் கேட்கின்றேன்.

ச. திருநாவுக்கரசு
இணுவில்.

# மக்கள் கருத்து

### நடவடிக்கை வேண்டும்

யாழ். முஸ்லிம் வட்டார மையவாடிக்கென காலஞ்சென்ற எம். எம். எஸ். முகமது அப்துல் காதர் ஹாஜியாரால் தருமசாதனமாக வழங்கப்பட்ட காணியில் தற்போது அத்துமீறிக்குடியேற்றம் நடைபெறுவது மிகவும் கவலைக்குரியது.

யாழ் நகரில் முஸ்லிம்களுக்கென உள்ள மையவாடிநிலம் போதாமையால் பல வருடங்களுக்கு முன்னர் பிரபல வர்த்தகராக விளங்கிய எம். எம். எஸ். முகமது அப்துல் காதர் ஹாஜியார் மையவாடிக்கு அருகிலுள்ள பதினேழு பரப்பு நிலத்தை விலைக்கு வாங்கி மையவாடிக்கென தருமசாதனமாக எழுதிவைத்தார்.

முஸ்லிம்களின் பிரேத அடக்கத்திற்கு மாத்திரமே என்றென்றும் அந்நிலம் பாவிக்கப்படவேண்டும் என அத்தருமசாதனத்தில் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்படியிருக்க அந் நிலத்தில் தற்போது ஒருசிலர் குறுகிய மனப்பான்மையோடு குடியேற்றத்திட்டமொன்றை அமைக்க முற்படுகிறார்கள்.

யாழ். முஸ்லீம்களின் மையவாடிக்கென ஒதுக்கப்பட்ட இந் நிலத்தில் குடியேற்றம் ஏற்படுத்துவது யாழ். முஸ்லீம்கள் அனைவரது மனத்தையும் புண்படுத்தியுள்ளது. இது குறித்து ஆவன செய்யப்பட வேண்டும்.

— ஓர் அன்பர்
யாழ்ப்பாணம்

### கட்டணக்குறைப்பு ஏற்படுமா?

யாழ்ப்பாணம் - குறிகாட்டுவானுக்கும் இடையில் இட்டத்தட்ட 21 (இருபத்தொரு) மைல்களுக்கு இ. போ. ச. பஸ்வண்டியில் 5 (ஐந்து) ரூபா கட்டணமாக அறவிடப்படுகின்றது ஆனால் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி கிட்டத்தட்ட இவ்வளவு தூரமாக இருந்தும் 3 ரூபா 40 சதம் மாத்திரமே கட்டணமாக அறவிடப்படுகின்றது

சென்ற கட்டணமாற்றத்தின்போது, தூரத்துக்கு ஏற்ப கட்டணம் நாடுமுழுவதும் அறவிடப்படும் எனவும்' தீவுப் பகுதிகளுக்கான கட்டணம் குறைக்கப்படும் எனவும், பத்திரிகைச் செய்திகள் வந்தன. எனினும் நடைமுறையில் எதுவும் வரவில்லை.

இதனால் நயினாதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவைச் சேர்ந்த மாணவர்கள், அரச ஊழியர்கள், மற்றும் பிரயாணிகள் போக்குவரத்துக்காக அதிகளவு பணத்தைச் செலவிட்டு வருகின்றனர்.

எனவே அதிக பிரயாணிகள் பயணம் செய்து அதிக வருமானத்தைப் பெற்றுத்தரும் இந்த சேவையில் ஜனவரியில் ஏற்படும் கட்டண மாற்றத்துடன் கட்டணக் குறைப்பை ஏற்படுத்தி மக்களுக்கு சிறந்த சேவை செய்ய போக்குவரத்து அமைச்சர், வடபிராந்திய போக்குவரத்துசபை உயர் அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர், மற்றும் உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

இரத்தினம்-குலநாதன்
நயினாதீவு-2.

எனது மகனை வெட்டிய சந்தேகநபர்

# தனது கழுத்தைகோடரியால் வெட்ட முயன்றார்

[மாவிட்டபுரம்]

"படுக்கையில் கிடந்த எனது மகனை கைக்கோடரியால் கண்டதுண்டமாக வெட்டிய சந்தேக நபர் பின்னர் தானும் தமது கழுத்தை கோடரியால் வெட்டிக்கொள்ள முனைந்தார். நான் அவரைத் தடுத்து கைக் கோடரியைப் பறித்தபோது அவர் வெளியே ஓடினார். அப்போது பொதுமக்கள் அவரைப் பிடித்துக்கொண்டனர்."

இளவாலை கொலைச் சம்பவம் குறித்த மரண விசாரணையில் சாட்சியமளித்த இறந்தவரின் தந்தையான மேரி ஜோசெப் என்பவர் கூறினார்.

இளவாலையைச் சேர்ந்த பிரான்சிஸ் சுகுணராஜா என்பவர் கடந்த 10ம் திகதி கைக்கோடரியால் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

இது குறித்து மல்லாகம் பதில் நீதிபதி திரு. ஜீ. வி. பாலசிங்கம் விசாரணை நடத்தினார்.

கொலையுண்டவரின் தந்தை மேலும் தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

கொலையுண்டவர் எனது மகனாவார். அவரும் ஏனைய பிள்ளைகளும் எமக்குரிய வீட்டிலிருக்கின்றனர். பின்பக்க கொட்டில் வீடு ஒன்றில் நான் வசிக்கிறேன். சம்பவதினம் எனது கொட்டிலுக்கு வந்த சந்தேகநபர் அங்கிருந்த மண்வெட்டியை தூக்கினார். நான் "மண்வெட்டியை, எதற்காக?" என்று கேட்டு அதனை அவரிடமிருந்து பறித்தேன். பின்னர் அங்கிருந்த கைக்கோடரியை எடுத்தார். 'கோடரி எதற்கு?' என்று கேட்டு அதனையும் பறிக்க முயன்றபோது அவர் அங்கிருந்து புறப்பட்டு எனது மகனிருந்த வீட்டுப்பக்கமாக சென்றார். அங்கு மகன் படுத்திருக்க பலமுறை அவரை கோடரியால் வெட்டினார். நான் ஓடிவந்தபோது சந்தேகநபர் தனது கழுத்தை கோடரியால் வெட்ட முனைந்து கொண்டிருந்தார். நான் கோடரியைப் பறித்துக் கொண்டபோது அவர் வெளியில் ஓடினார். அப்போது அவலச் சத்தம் கேட்டு ஓடிவந்த பொதுமக்கள் அவரைப் பிடித்தனர்" என்றார்.

கொலையுண்டவரின் தாய் ரோசம்மா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

சம்பவதினம் வீட்டின் ஹோலில் நான் இருந்தேன். அச்சமயம் எனது மகன் அருகில் படுத்திருந்தார். சந்தேகநபர் இங்கு கோடரியுடன் வந்தபோது "ஏன் வந்தாய்?" எனக் கேட்டேன். அவர் பதில் ஏதும் கூறவில்லை. மகனுக்குக் கிட்டச் சென்று பலமுறை அவரை வெட்டினார். வெட்டுவதை நான் நேரிலேயே கண்டேன்" என்றார்.

கொலையுண்டவரின் இரு சகோதரிகளும் சாட்சியமளித்தனர்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி செல்வி எஸ். கனகசபை பிரேத பரிசோதனை செய்து அதிர்ச்சி, இரத்தப்போக்கு என்பன மரணத்திற்குக் காரணம் என தெரிவித்தார்.

பதில்நீதிபதி திரு. ஜீ. வி. பாலசிங்கம் தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்துள்ளார். காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பீரிஸ், சார்ஜன்ட் தியாகராஜா ஆகியோர் விசாரணைக்கான ஒழுங்குகளைச் செய்தனர்.

## மூளைக்கோளாறு உள்ளவரா?

(மாவிட்டபுரம்)

இளவாலையில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் கொலைச் சந்தேக நபர் மூளைக்கோளாறு உடையவரா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதையடுத்து பொலிசார் அதுபற்றி விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இளவாலையைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான பிரான்சிஸ் சுகுணராஜா (35 வயது) என்பவர் கடந்த 10ம் திகதி கைக்கோடரியால் வெட்டிக் கொலை செய்யப்பட்டது தெரிந்ததே.

இதுதொடர்பாக பொதுமக்களால் பிடிக்கப்பட்டு காங்கேசன்துறை பொலிஸில் ஒப்படைக்கப்பட்ட சந்தேக நபரான (சார்ள்ஸ் ஜோசெப் மரியான் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு இம்மாதம் 17-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர் மூளைக்கோளாறுடையவர் என்றும், இது குறித்து முன்னர் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டு மருந்துவகைகள் பாவித்து வந்தாரெனவும் பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

சந்தேகநபருக்கு கொலைசெய்யும் நோக்கம் எதுவும் இவரிடம் இருக்கவில்லையென்றும் திடீரென ஏற்பட்ட மனக்குழப்பமே கொலைக்குக் காரணமாக இருந்திருக்கலாமெனவும் பொலிஸார் கருதுகின்றனர்.

சந்தேக நபரது சகோதரியை திருமணம் செய்திருந்த கொலையுண்டவர் மனைவி பிள்ளைகளை சரிவரப் பராமரிக்காமையால் மனைவி அவரைப் பிரிந்து வாழ்ந்து வருகிறார். இதுசம்பந்தமாகவும் சந்தேக நபரது மனதில் கொலையுண்டவர் மீது பகைமை இருந்திருக்கலாமெனவும் விசாரணைகள்மூலம் தெரியவந்துள்ளது.

## இந்து மகாநாட்டு பேராளர்களுக்கு தஞ்சாவூர் தட்டுகள்

(மட்டக்களப்பு)

இலங்கையில் அடுத்தமாதம் நடைபெறவுள்ள அகில உலக இந்து மகாநாட்டில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளுக்கு மகாநாட்டை நினைவுகூரும் சின்னம் பொறித்த தஞ்சாவூர் வெள்ளித்தட்டுகள் வழங்கப்படவுள்ளன. இந்த வெள்ளித் தட்டுகள் தமிழக அரசாங்கம் வழங்கவுள்ளதாக தமிழக முதல்வர் திரு எம் ஜி இராமச்சந்திரன் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையிடம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மகாநாட்டிற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கும் பொருட்டு இந்தியாவுக்குச் சென்ற அமைச்சர், தமிழக முதல்வர் உட்பட தமிழக அமைச்சர்களைச் சந்தித்து மகாநாடு குறித்து பேச்சுவார்த்தை நடாத்தி கலந்துகொள்வதற்கான அழைப்பும் விடுத்தார். சில அமைச்சர்கள் இம்மகாநாட்டில் கலந்துகொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார்களாம்.

மகாநாட்டு சிறப்பு மலரை சிறப்பான முறையில் தமிழகத்தில் அச்சிட்டு அன்பளிப்புச் செய்ய அமைச்சர் திரு. இராசதுரையின் நண்பர்கள் முன்வந்துள்ளார்கள்.

மகாநாட்டில் [illegible] கலந்து கொள்ளாதபோதிலும் காஞ்சிப் பெரியவர், பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபா, சங்கராச்சாரியார் சுவாமிகள் ஆகியோர் மகாநாடு சிறப்போடு நடைபெற தங்கள் ஆசீர்வாதத்தை அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்கள்.

இம்மகாநாட்டில் கிருபானந்தவாரியார், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், பாடகி சுப்புலட்சுமி போன்றவர்களும் கலந்துகொள்கிறார்கள். (இ)

## பதவிப் பிரமாணம்

(கொழும்பு)

பருத்தித்துறையைச் சேர்ந்த செல்வி மெலனி ஆறுமுகநாதன் உயர்நீதிமன்ற நீதியரசர்களான இஸ்மாயில், வணசுந்தர, தெவிக் சமரக்கோன் ஆகியோர் முன்னிலையில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

சட்டக்கல்லூரி இந்துமகா சபையின் உபசெயலாளராக அங்கம் வகித்த செல்வி இவர் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி, பருத்தித்துறை ஆச்சி மேரி கன்னியர் கல்லூரி, திருகோணமலை [illegible], கொழும்பு [illegible] கன்னியர் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவியாவார். (புலோலியூர்)

## ஜனாதிபதியை சந்திக்க ஏற்பாடு

(பச்சிலைப்பள்ளி)

உபதபாலதிபர்களின் ஓய்வூதியம் வழங்கும் விடயம் தொடர்பாக, அகில இலங்கை தமிழ்பேசும் உப-தபாலதிபர்களின் தொழிற்சங்கம், ஜனாதிபதியை நேரில் சந்தித்துப் பேச நடவடிக்கை எடுத்து வருகிறது.

தபால்தந்தி தொலைத் தொடர்பு அமைச்சர் திரு. டீ. பி. விஜயதுங்க ஊடாகவே சந்திப்பு நடைபெற இருக்கிறது.

உபதபாலதிபர்களின் ஓய்வூதியம் தொடர்பான மகஜர் ஒன்று மாவட்ட மந்திரிகள் ஊடாகவும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ச)

## இளம் பெண்ணை கடத்தமுயன்ற இளைஞர்களை தோழிகள் விரட்டினர்

(உடுப்பிட்டி)

தேவாலயத்திற்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய இளம் பெண் ஒருவரைக் கடத்த வந்த இளைஞர் கோஷ்டியை அவ் இளம்பெண்ணுடன் கூட வந்த தோழிகள் ஓட ஓட விரட்டியடித்தனர்.

இச்சம்பவம் வசாவிளானில் நடந்துள்ளது.

வசாவிளானைச் சேர்ந்த இவ் இளம்பெண் வசாவிளானிலுள்ள தேவாலயம் ஒன்றில் வழிபாடு செய்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் காரொன்றில் வந்த இளைஞர்கள் சிலர் அவ் இளம் பெண்ணைக் கடத்துவதற்கு முயற்சி செய்ததாகவும் அப்பொழுது இளம்பெண்ணுடன்கூட வந்த பெண்கள் அந்த இளைஞர்களை ஓட ஓட விரட்டியதாகவும் கூறப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக பிரஸ்தாப இளம்பெண்ணின் தகப்பனார் காங்கேசன்துறைப் பொலிஸில் புகார் செய்துள்ளதைத் தொடர்ந்து பொலிசார் ஐவரை சந்தேகத்தின்பேரில் தேடிவருகின்றனர்.

## சிறிமா வீட்டுக்கருகில் உண்ணாவிரதம் இருப்பாராம்

(யாழ்ப்பாணம்)

ஜனவரி மாதம் 14ம் திகதி காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் இல்லத்திற்கு அருகாமையில் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அகில பாரத ஒற்றுமை முன்னணியின் அமைப்பாளர் டாக்டர் ச. தர்மலிங்கம் அறிவித்துள்ளார்.

இலங்கையில் தனித்தமிழ் நாடு உருவாக்கப்படலாகாது, ஆசியானில் இலங்கை சேரக் கூடாது, தென்னாசிய பாரதம் ஒன்றாக உருவாக வேண்டும், இந்து-சமஸ்கிருத கலாசாரக் கொள்கை உருவாக வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பிப்பாராம்.

இதுபற்றி திருமதி பண்டாரநாயக்காவுக்கும், ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனாவுக்கும் அவர் தந்திகள் அனுப்பியுள்ளார்.

## கதிர்காமம்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட எண்ணிக்கை தொகை குறைவாக இருந்தாலும் அவற்றை அதிகரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உலகத்திலே இந்துசமயத்துக்கென தனியான ஓர் அமைச்சு எமது நாட்டிலேதான் உருவாக்கப்பட்டது. இந்த அமைச்சுகூட இந்த அரசாங்கத்தின் காலத்தில் தான் புதிதாக உருவாக்கப்பட்டது. இந்த புதிய அமைச்சர் பதவியை ஏற்றுள்ள நான் அதற்குரிய குறைந்த நிதியைக் கொண்டு திட்டமிட்டு வெற்றிகரமான முறையில் செயல்பட்டு வருகிறேன்.

எனது அமைச்சின் கடந்த கால சேவைகளை நான் [illegible] நோக்க வேண்டும். [illegible] இந்துஆலயத்தில் பூசைசெய்ய சிவாச்சாரியாரை அனுப்பியுள்ளது. திருக்கேதீஸ்வரத்தில் சிவாச்சாரியார் குருகுலப் பயிற்சிப் பாடசாலையை ஆரம்பித்து நடத்தி வருகிறோம். கதிர்காமத்தில் 50 லட்சம் ரூபா செலவில் இந்து யாத்திரிகர் விடுதி, யாழ்ப்பாணத்தில் 25 லட்சம் ரூபா செலவில் ஆறுமுகநாவலர் மணி மண்டபம், மட்டக்களப்பில் 50 இலட்சம் ரூபா செலவில் விபுலானந்தர் இசைக்கல்லூரி இவைகளை அமைப்பதற்கான ஒப்பந்தங்கள் பூர்த்தியடைந்துவிட்டன. அடுத்த மாதம் வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

இதைவிடத் தமிழ் இந்துக்கள் குறைந்து வாழுகின்ற பகுதிகளில் இந்துக் கோவில்களுக்குக் காணிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது நிதி உதவியும் செய்யப்பட்டுள்ளது.

உலக இந்துக்கள் அனைவரும் ஒன்றுசேர முடியாது. இந்நிலையில் அவர்கள் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் அகில உலக இந்து மகாநாடு [illegible] பல இலட்சம் ரூபா செலவில் கொழும்பில் நடைபெறுகிறது. இந்த மகாநாட்டுக்கு அரசாங்கத்தினால் 25 இலட்சம் ரூபா செலவு செய்யப்படும். ஏனைய நிதி பொதுமக்களிடமிருந்து திரட்டப்படும். (இ)

## வரி விளம்பரம்

தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு வியாபார அனுபவத்துடன் ஆங்கில அறிவும் மின்சார உபகரணங்களைப் பற்றிய அறிவுமுள்ள முப்பது வயதுக்குக் குறைந்த ஆண்கள் தேவை. இதே நிறுவனத்திற்கு க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் வர்த்தகவியலில் சித்தியும், ஆங்கில அறிவும் நல்ல எழுத்துமுள்ள பெண்கள் லிகிதர் சேவைக்குத் தேவை. எதிர்பார்க்கும் சம்பளத்துடன் உறவினரல்லாத முக்கியஸ்தர் இருவரின் அண்மையில் பெறப்பட்ட நற்சாட்சிப் பத்திரங்களுடன் 19-12-81க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1708 மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 1708

கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்
பரந்தன்

### கேள்வி விண்ணப்பங்கள்

வெற்றுச் சாக்குகள்,
வெற்று பரல்கள்

எமது சங்கத்தில் மேற்படி பொருட்களுக்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் செய்ய விரும்புபவர்கள் பொருட்களை நேரில் பார்வையிட்டு விண்ணப்ப வைப்புப் பணத்தினைச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி, பதிவுத் தபால் மூலம் தலைவர், கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், பரந்தன் என்ற முகவரிக்கு 29-12-81க்குப் பிந்தாமல் (கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்ப விபரத்தினை எழுதி) அனுப்புதல் வேண்டும்.

1. வெற்றுச் சாக்குகள் விண்ணப்ப வைப்புப் பணம் ரூபா 110/- (ரூபா 100/- திருப்பி வழங்கப்படும்.)
2. வெற்றுப் பரல்கள் விண்ணப்ப வைப்புப் பணம் ரூபா 60/- (ரூபா 50/- திருப்பி வழங்கப்படும்.)

பொதுமுகாமையாளர்,
கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்,
(1677) பரந்தன்.

## வெற்றிடங்கள்

வெளி வெப்பம் குறைவான
புதிதாக அமைக்கப்பட்ட
மின்கண்ணாடிச் சூளையில்
[ELECTRIC GLASS FURNACE]

வேலைசெய்வதற்கு அனுபவமுள்ள Bottle & Press Mechine இயக்குநர், கட்டர், கெல்ப்பர் போன்றவர்களும்,
சிமினி கிளாஸ் வகைகள் ஊதுவதற்குரிய பபுளர், கெல்ப்பர், புளோவர் போன்றவர்களும், வேலை பழகுபவர்களும் (Trainees) உடனடியாகத் தேவை.

தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

உடனே நேரில் வரவும்.

சேவி கிளாஸ் &
மெட்டல் வேக்ஸ்

நீர்வேலி. (1651)

